
கடவுளின்
ஹைக்கூ...
விக்னேஷ்

# கடவுளின் ஜைனக்கூ

*M விக்னேஷ்*

நூல் : **கடவுளின் ஹைக்கூ**

ஆசிரியர் : **.M விக்னேஷ்**

மின்னஞ்சல் : ***vykkyvrisa@gmail.com***

வெளியீடு ***: FreeTamilEbooks.com***

உரிமை ***:Creative Commons Attribution-Non-commercial-No Derivatives 4.0 International License.***

உரிமை – **கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.**

# முன்னுரை

*"**க**ண் கண்ட கடவுளை கவிஞனாக்கி",*

*அவன் கண்ட இந்நாள் உலகை*

*கருவாக்கி , உயிரும் மெய்யுமாய்*

*இருப்பவன் சிந்தையில் உயிர்மெய்*

*எழுத்துக்கள் உலாவவிட்டு ,*

*அண்டங்கள் காப்பவன் கரங்களில்*

*அமிர்த தமிழை விளையாடவிட்டு,*

*கற்சிற்பங்களில் ஒளிந்து திருக்கோயில்*

*கொண்டவன் வெண் காகிதம் கொண்டு*

*கவிச்சிற்பம் வடித்தால் ....???*

*என்ற கேள்விகளின் கற்பனை*

*தொகுப்புகளே*

**"கடவுளின் ஹைக்கூ"**

# கடவுளின்
# கைவண்ணம்



*பசுமை சாட்டையில்*

*நான் சுற்றும் பம்பரம்*

***"உலகம்...!"***



மண்ணில் பூத்த கோபுரம்
மேகங்களின் வேகத்தடை

***"மலைகள்....!"***



*நிலமணிந்த நீலச் சேலை*

*உண்டாயின ஆயிரம் மடிப்புகள்*

***"நதிகள்...!"***



பூமியின் பின்னல் இல்லாக் கூந்தல்

தென்றலின் மணக்கோலம்

***"காடுகள்...!"***



இயற்கை காதலன்

ஆறறிவு இல்லா அறிவு ஜீவி

**"விலங்குகள்...!"**



*ஆண் பெண் சமத்துவம் பேசும்*

*நிகழ்கால உயிர் ஓவியம்*

***"திருநங்கை...!"***



அச்சு பிழை புத்தகம்

தலைப்பு தன்னம்பிக்கை

***"மாற்றுத்திறனாளி...!"***

# கடவுளின் பிழை



*படைத்தல் பிழை*

*மன்னிக்கமுடியா பெருங்குற்றம்*

***"மனிதன் ...!"***



*ஆசையின் அஸ்திவாரம்*

*அழிவின் ஆரம்பம்*

***"பாலினம்...!"***



*இமை தீட்டும் வண்ணமில்லா*
*தூரிகை*

*இருதயம் மீட்டும் ஸ்வரமில்லா*
*யாழிசை*

***"உணர்வுகள்...!"***



இயற்கை பேரழிவு

தவிர்க்க முடியா பெரும் விபத்து

***"காதல்....!"***



*ஆத்திர தாயின்*

*மூத்த மகன்*

***"கோபம்...!"***



உடைத்த ஒரு தேங்காய்க்குள்

ஓராயிரம் கோரிக்கைகள்

***"சுயநலம்...!"***



பொல்லாத மனம்

போதிக்கும் மந்திரம்

***"பேராசை..!"***



ஆண்டிக்கோலம் பூண்ட கடவுளுக்கு
வைர அங்கி

அன்னதான உபயமாகும் ஐம்பது ரூபாய்

***"ஆடம்பரம்...!"***

# காலச்சக்கரம்



மனித இனத்தின் அடையாளம்

எதிர்கால ஆயுதம்

***"ஆறாம் அறிவு ...!"***



*வெட்டிய மரம் கட்டிய மண்டபம்*

*வாசல்  அலங்கரிக்கும் வாழை மரம்*

***"நவீன மாற்றம் …!”***



சோம்பேறி தனத்தின் விடுதலை

வியர்வைகளின் கடுங்காவல் தண்டனை

***"கண்டுபிடிப்புகள்...!"***



*அளவில்லா தரவுகள் குறைவில்லா பேட்டரிகள்*

*இந்நாளின் அதிகபட்ச வேண்டுதல்*

***"தொழில்நுட்பம்...!"***




*மாடர்ன் நோக்கு வர்மம்*

*கையடக்க அழகி*

***"கைபேசி...!"***



மடி தவளும் செயற்கை குழந்தை

எந்திரனின் தந்தை

***"மடிக்கணினி...!"***



காலமான தாத்தாவின் கைபேசி
குறுஞ்செய்தி

*Your Plan is expired.*

***"இணையம்...!"***



உதடுகள் இல்லா உரையாடல்

எழுத்துகளின் கலப்புத்திருமணம்

***"குறுஞ்செய்தி ...!"***



இமை திரைமேல் கொண்ட காதல்

மீள முடியா பெரும் மயக்கம்

***"தொழில்நுட்ப போதை ...!"***



படைத்த  உலகை அழித்ததது போதும்

படைத்தவனை தேடி அழிப்போம்

***"விண்வெளிப்பயணம்...!"***

# கவிகாலம்



தீயோரின் உறைவிடம்

நல்லோரின் நரகம்

***"கலியுகம்...!"***



அகராதி பிடித்த மனிதர்களின்

தனி அகராதி

***"மதம் ...!"***




*வாக்குரிமை இல்லா என்*

*தட்டிலும் 500 ரூபாய்*

***"அரசியல்...!"***



கண்களை குத்தாததன் விளைவு

பொய் வாக்குறுதி என்னிடமும்

*"அரசியல்வாதி…!"*



லட்சங்கள் பல வேண்டிய பிராத்தனை
காணிக்கையாகும் சில்லரைகள்

***"பணத்தாசை...!"***




*படைத்தவன் கல்லானான்*

*பணம் படைத்தவன் கடவுளானான்*

***"ஊழல்...!"***



மனிதனின் எண்ணற்ற தவறுகள்

கனமாகும் கோவில் உண்டியல்

***"பாவங்கள்...!"***



இரண்டு கால் மிருகம்

செய்யும் அதர்மம்

***"குற்றம்...!"***



வறுமையில் இளைத்தவன்

மாட்டிக்கொண்ட ஓட்டை

***"சட்டம்...!"***

# கடவுளெனும்
# காட்சிப்பொருள்



*அண்டம் காப்பவன் கதவுகளில்*

*ஐந்து அடுக்கு  பூட்டு*

***"கோயில்கள்...!"***



*இருப்பவனுக்கு காட்சித்திரை*

*இல்லாதவனுக்கு காட்சிப்பிழை*

***"சிறப்பு தரிசனம்...!"***



எரிகின்ற நெருப்பில் எங்கு தேடுவேன்
கரைகின்ற என் தோஷங்கள்

***"யாகம்...!"***




பத்து ருபாய் சீட்டில்

பாவ மன்னிப்பு

***"அர்ச்சனை ...!"***




பொருத்தமில்லா மனங்களின்

பத்து பொருத்தங்கள்

***"ஜாதகம்...!"***



சோதனை ஏவுகணைகள்

போதிக்கும் வாழ்க்கை அனுபவங்கள்

***"நவகிரகங்கள்...!"***



ஓயாத பிராத்தனையின் பலன்

தண்டனைகளின் வாய்தா

*"பரிகாரம்...!"*

# கடவுளின்
# திருவிளையாடல்



*வாழ்ந்து பார்ப்பது - சிலரை*

*வாழவைத்து பார்ப்பது*

***"வாழ்க்கை ...!"***



நிரந்தரமில்லா வாழ்க்கையின்

நினைவு சின்னம்

***"வயோதிகம்...!"***



*நான் படைக்காத ஒன்று*

*நான் படைப்பதாக பலர் சொல்வதும் உண்டு*

***"நோய் ...!"***



*காலமெனும் கடத்தல்காரன் கடத்தும்*

*நினைவெனும் பொக்கிஷம்*

***"மறதி...!"***



*புண்ணியங்களின் சலுகை*

*பாவங்களின் வட்டி*

***"ஆயுள்...!"***



அன்பேனும் விதை
துளிர்விட்ட வேர்

***"மனிதாபிமானம்...!"***



பிறக்கும் போது விதிக்கப்பட்டது

பிறக்கும் முன்பே விதைக்கப்பட்டது

***"விதி...!"***



இறந்தகால பாவங்களின்

நிகழ்கால தண்டனைகள்

***"கர்மா ...!"***



*நான் இட்ட முற்று புள்ளி*

*கவிதைக்கும் உங்களுக்கும்*

***"மரணம்...!"***

# ஆசிரியர் குறிப்பு

*என் பெயர்* ***விக்னேஷ் .M*** *,*

*"ஹைக்கூ வடிவில், இது என்* ***இரண்டாவது*** *புத்தகம் மற்றும் கவிதை படைப்புகளில் இது என்* ***நான்காவது*** *புத்தகம்".*

*தமிழ் மேல் கொண்ட பற்றை , பயின்ற கணிப்பொறியியல் வழி மேம்படுத்தும் நோக்கத்தோடு,மின்னணு புத்தகங்கள் எழுதத் தொடங்கி, இன்று என் நான்காவது புத்தகத்தை வெளியிடுகிறேன் .*

*மேலும் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் ,சுயஎழுத்தாளர்களின் படைப்புக்களை மின்னணு மாற்றமாக பதிப்பிட வழிவகை செய்யவும், "****மின்கவி****" **(https://www.minekavi.com )** என்ற*

வலைத்தளத்தை உருவாக்கி நிறுவியுள்ளேன் .தனிமனித அடையாளம் உருவாக்கும் நோக்கத்தோடும், இக்காலத்திற்கேற்ப எளிய வரிகள் கொண்ட கவிதைகள் படைக்கும் நோக்கத்தோடும் மின்னணு புத்தகங்களை ***Amazon Kindle Direct Publishing*** வழி படைத்து வருகிறேன் .

மேலும் என் படைப்புகளை ***freetamilebooks.com*** தளத்திலும் பதிவிட்டு வருகிறேன் .

“வாசகர்களாகிய தங்களின்,மேலான ஆதரவும் மற்றும் புத்தகம் தொடர்பான கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன “.

**தொடர்புகொள்ள;**

**மின்னஞ்சல்** *: vykkyvrisa@gmail.com*

**வலைத்தளம்** *:*

*amazon.com/author/mvignesh &*

*https://www.minekavi.com* ***(Independent Writers)***

**தொலைபேசி** *:9626227537*